சென்னை
செவ்வாய்
நவம்பர் 4,
2025
மாணவர் பதிப்பு

# தினமலர்

75 பவள விழா ஆண்டு

விலை ரூ.3/-

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்

www.dinamalar.com




பட்டம்

03 • என் நேரமும் உன் நேரமும் ஒன்றல்ல
04 • சோழர் குலத்தின் சரிவு; சிற்றரசனின் வெற்றி
05 • கதைக் களம்: நான்கு சாக்லெட்டுகள்
06 • இணைய உலகிலும் இனி நாம் பெஸ்ட்!
07 • சூரிய குடும்பத்தின் புதிய விருந்தாளி! ஏலியனா?
08 • அழைப்பிதழ் தயாரிப்பு

# உலகக் கோப்பை மகளிருக்கு 51 கோடி



ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை போட்டியில், முதன்முறையாக இந்திய மகளிர் அணி வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளது. ஹர்மன்ப்ரீத் கௌர் தலைமையிலான இந்த அணி, இறுதிப் போட்டியில், 52 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்க மகளிர் அணியை வீழ்த்தியது. 2005, 2017 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் இறுதிவரை வந்த இந்திய அணி, கோப்பையை வெல்ல முடியவில்லை. இப்போது அந்த வெற்றி சாத்தியமாகியுள்ள நிலையில், பாராட்டுகள் குவிகின்றன. இந்திய கிரிக்கெட் போர்டு, மகளிர் அணிக்கு 51 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு கொடுத்து கௌரவித்துள்ளது.

# 'பட்டம்' எழுத்தாளருக்கு கௌரவம்



நமது 'பட்டம்' இதழில் தொடர்ந்து எழுதிவரும் கணிதவியலாளர் டாக்டர் ஆர். சிவராமன், உலகின் முதல் 2 சதவீத செல்வாக்கு மிக்க விஞ்ஞானிகளின் ஸ்டான்போர்ட்–எல்சேவியர் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். நிபுணர்களால் தொகுக்கப்பட்ட இந்தப் பட்டியல், வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை, பெறப்பட்ட மேற்கோள்கள் போன்ற அளவீடுகளின் அடிப்படையில் சிறந்த ஆராய்ச்சியாளர்களை அடையாளம் காணும் உலகளாவிய தரவுத்தளமாகும். உலகளவில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சியை எடுத்துக்காட்டும் வருடாந்திர ஸ்டான்போர்ட்– எல்சேவியர் தரவரிசையில் அவர் தொடர்ந்து இடம்பெற்று வருகிறார்.

# தடை போட முடியாது!

சீனாவிலும் ஆஸ்திரேலியாவிலும் 14 முதல் 18 வயதுடைய சிறுவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருப்பது போல, இந்தியாவிலும் தடை விதிக்க வேண்டும் என்றும் கோரி உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்க மறுத்துவிட்டது. நேபாளத்தில் சமூக வலைத்தளப் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதைப் பார்த்தீர்களா என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டி, மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது.



# இந்திய பண்பாட்டுக்கு அங்கீகாரம்

UNESCO
United Nations Educational, Scientific and Cultural Organization
Intangible Cultural Heritage

அருவமான பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதற்கான யுனெஸ்கோவின் 20வது மாநாடு, முதன்முறையாக வரும் டிசம்பர் மாதம் டில்லி செங்கோட்டையில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில், ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் மரபுகளைச் சொல்லும் அருவமான பண்பாட்டு அம்சங்களை முன்வைத்து, அதற்கு அங்கீகாரம் பெறும். ஏற்கெனவே இந்தியாவின் துர்கா பூஜா, யோகா, கும்பமேளா, கர்பா, வேதம் ஓதுதல் உள்ளிட்டவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தப் பட்டியலில் தீபாவளி சேரவுள்ளது. வரும் மாநாட்டில், சத் புஜை அங்கீகாரம் பெற முன்மொழியப்படும்.

# Pakistan secretly conducting nuclear tests

Donald Trump, during a recent interview, made a huge revelation when he mentioned that Pakistan has been secretly testing nuclear weapons. Trump said that while the US had refrained from testing for over three decades, several countries including Pakistan continue to carry out underground nuclear trials away from global scrutiny. "We're going to test because they test," Trump said. "And certainly North Korea's been testing. Pakistan's been testing. They don't go and tell you about it. They test way underground, where people don't know what's happening. You just feel a little vibration." Trump's comments mark the first time a sitting US president has directly accused Pakistan of continuing nuclear testing.



தினமலர் அலுவலக நேரம்: காலை 9:30 – மாலை 6:00 மணி
★ 58B, கண்ணப்பன் தெரு, சின்ன காஞ்சிபுரம்–631 501 044 - 2723 4224
★ பிளாட் எண் 66, 2வது குறுக்குத்தெரு, அய்யனார் அவென்யூ, திருவள்ளூர்–602 001 044 - 2766 3129

DINAMALAR-National Tamil Daily e-mail: dmrcni@dinamalar.in
Edited, Printed and Published by Dr.K.Ramasubbu, on behalf of Dinamalar at New Standard Press, T.V.R. House, Medavakkam, Chennai - 600 100
Administrative Office: 39, Whites Road, Chennai-600 014.
Advt e-mail: dmrae@dinamalar.in Ph 044 - 2854 0001 - 03
Joint Managing Editor Dr.R.Lakshmipathy RNI No.33618/79

பட்டம்
பொறுப்பாசிரியர்: ஆர்.வெங்கடேஷ். ஆசிரியர் குழு: ரமேஷ் வைத்யா, இ.எஸ்.லலிதாமதி, ம.பா.காந்திராமன், எஸ்.மைதிலி, எஸ்.நித்தியானந்தம்.
வடிவமைப்பு: பா.ஸ்டீபன், த.கார்த்திகேயன். ஓவியங்கள்: ஈ.பிரகாஷ்.
முகவரி : பட்டம், தினமலர், 69, திரு.வி.க. ஹைரோடு, ராயப்பேட்டை, சென்னை– 600 014.
மின்னஞ்சல் : pattam@dinamalar.in தொலைபேசி : 98410 53881.

திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளிகளுக்கு மொத்தமாக வரவழைக்க, சந்தா விவரங்களுக்கு
சென்னை : 98843 91342 | 99443 09681 | 97511 36644

# என் நேரமும் உன் நேரமும் ஒன்றல்ல

தினேஷும், கணேஷும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் பள்ளியில் பேச்சுப் போட்டி நடக்கிறது. தினேஷ் முதல் பரிசு பெறுகிறான். அவனது வெற்றிக்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அவனை விண்வெளிக்குக் கூட்டிச் செல்கிறது.

கணேஷுக்கு தினேஷை பிரிவதில் வருத்தம். இருப்பினும், தன்னுடைய நினைவாக, தினேஷுக்கு ஒரு கைக் கடிகாரத்தைப் பரிசளிக்கிறான். தானும் அதே வகை கைக் கடிகாரம் ஒன்றைக் கட்டிக்கொள்கிறான்.




வேகமாகச் செல்லும் விண்கலத்தில் விண்வெளியைச் சுற்றிவிட்டு, ஓர் ஆண்டுக்குப் பிறகு பூமிக்கு வந்தான் தினேஷ். கணேஷுக்கு அவன் நண்பனை நல்லபடியாகச் சந்தித்ததில் மகிழ்ச்சி. ஆனால், ஓர் அதிர்ச்சி!

இருவரின் கடிகாரத்தையும் அருகருகே வைத்து பார்த்தபோது, கணேஷின் கடிகாரத்தை விட, தினேஷின் கடிகாரம் நேரத்தைச் சற்று குறைவாகக் காட்டியது. ஆனால், விண்வெளிக்குக் கிளம்பும் போது, கைக் கடிகாரங்கள் இரண்டும் ஒரே நேரத்தில் தான் இருந்தன.

### ஏன் அந்த வித்தியாசம்?

இயற்பியலில் அந்த நேர வித்தியாசத்தை 'கால விரிவாக்கம்' (Time Dilation) என்று சொல்வார்கள்.

### முதல் கோட்பாடு

1905ஆம் ஆண்டு, ஐன்ஸ்டீன் 'சிறப்பு சார்பியல்' (Special Relativity) என்ற கோட்பாட்டைக் கண்டுபிடித்தப் போது, அந்த ஆச்சரியமான உண்மை வெளியே வந்தது.

'ஒருவர் வேகமாகப் போகும்போது, அவருடைய நேரம் மெதுவாகப் போகும். நொடிக்கும் குறைவான இந்த வித்தியாசத்தை, கைக் கடிகாரத்தில் துல்லியமாகக் கண்டுபிடிக்க முடியாது. அணு கடிகாரங்களில் (Atomic Clocks) மட்டுமே இந்த நேர வித்தியாசத்தைத் துல்லியமாகக் காண முடியும்.'

அப்படியென்றால், தினேஷ் மற்றும் கணேஷின் கைக்கடிகாரங்கள் எப்படி நேர வித்தியாசத்தைக் காட்டின?

ஓர் ஆண்டு ஆனதால் அந்த வித்தியாசத்தை அவர்கள் அறிந்தார்கள். இதுவே குறுகிய காலமாக இருந்திருந்தால் வித்தியாசம் தென்பட்டிருக்காது!

சிறப்பு சார்பியல் கோட்பாட்டை நிரூபிக்க, 1971ஆம் ஆண்டு ஜோசஃப் ஹஃபீல் மற்றும் ரிச்சர்ட் கீட்டிங் ஆகியோர் அணு கடிகாரங்களை விமானத்தில் அனுப்பி வைத்தார்கள். அதேநேரத்தில், பூமியிலும் ஓர் அணு கடிகாரத்தை வைத்திருந்தார்கள்.


ஐன்ஸ்டீன் சொன்னது போலவே, விமானத்தில் வேகமாகச் சுற்றிவந்த கடிகாரங்கள், மெதுவாக ஓடி, நேரத்தைச் சற்று குறைவாகக் காண்பித்தன!

### இரண்டாவது கோட்பாடு

1915ஆம் ஆண்டு, ஐன்ஸ்டீன், இரண்டாவதாக ஒரு கோட்பாட்டை முன்மொழிந்தார். அது பொதுச் சார்பியல் (General Relativity) கோட்பாடு என்று அழைக்கப்பட்டது.

'ஈர்ப்பு விசைக்கு (Gravity) மிக அருகில் இருக்கும் போது, கைக் கடிகாரங்கள் மெதுவாக ஓடும்,' என்றது பொதுச் சார்பியல் கோட்பாடு.

உதாரணத்துக்கு, ஓர் அறுபது மாடி கட்டடம் இருக்கிறது. தரை தளத்தில் ஒருவரும் இருபதாவது தளத்தில் ஒருவரும் வசிக்கிறார்கள். இவர்களில், தரை தளத்தில் வசிப்பவரின் கைக் கடிகாரம், அறுபதாவது தளத்தில் இருப்பவரின் கடிகாரத்தை விட மெதுவாக ஓடுவதைப் பார்க்கலாம். ஏனென்றால், தரை தளத்தில் இருப்பவர் புவியீர்ப்பு விசைக்கு மிக அருகில் இருக்கிறார்.


ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

இவை நம் வாழ்வில் நிஜமாகவே நடக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம்.

ஜிபிஎஸ் (GPS) செயற்கைக் கோள்கள், நகரும் வேகத்தையும் ஈர்ப்பு விசையையும் பொறுத்து தன்னுடைய அணு கடிகாரங்களை, சரிப்படுத்திக் கொண்டே இருப்பதால் தான், நம்முடைய கைப்பேசியில், நகர்வு வரைபடம் (Google Map) சேரும் தூரத்தையும் சேரும் நேரத்தையும் துல்லியமாகக் காண்பிக்கின்றன.

இதன்மூலம், நம் ஒவ்வொருவருக்கும் 'தனிப்பட்ட நேரம்' ஒன்று உள்ளது. அது ஈர்ப்புவிசை, வேகம், நேரம் ஆகியவற்றை இணைக்கும் அற்புதமான உண்மை.

இனிமேல், கைக் கடிகாரங்கள், ஒரே நேரத்தைக் காண்பித்தாலும், உங்கள் நேரம் அடுத்தவர் நேரத்தை விட மாறுபட்டது என யோசிப்பீர்களா?

– என்.சுஜாதா நடராஜன்

# பென்குயின்கள் ஏன் உறைவதில்லை?



கடுமையான குளிர் நிலவும் பகுதி அண்டார்டிகா. பெரும்பாலான பென்குயின்கள் இங்கு தான் வாழ்கின்றன. எப்படி இவை அந்தக் கடுமையான குளிரைச் சமாளிக்கின்றன? உறையாமல் இருக்கின்றன?

ஓர் எளிய சோதனை மூலம் அதனைத் தெளிந்துகொள்ளலாம்!

### சோதனைக்குத் தேவையான பொருள்கள்:

| | |
|---|---|
| A4 தாள் | – 1 |
| பென்சில் | – 1 |
| நீலப் பேனா | – 1 |
| மெழுகு வர்ணப் பூச்சு (Wax colour crayons) | – 1 அல்லது 2 |
| டம்ளர் தண்ணீர் | |

### சோதனை

- A4 தாளில் இரண்டு பெண்குயின் படங்களை பென்சிலில் வரைந்துகொள்ளுங்கள்.
- நீலப் பேனாவைக் கொண்டு ஒரு பெண்குயினை வர்ணம் தீட்டுங்கள்.
- மெழுகு வர்ணப் பூச்சுகளைப் பயன்படுத்தி ஒரு பெண்குயினை வர்ணம் தீட்டுங்கள்.

டம்ளர் தண்ணீரில் விரலை முக்கி எடுத்து, வர்ணம் தீட்டப்பட்ட இரண்டு பெண்குயின்கள் மீதும் விடுங்கள். 4 அல்லது 5 சொட்டுகள் போதும்!

### என்ன ஆச்சு?



படத்தில் காட்டியபடி, நீலப் பேனாவால் வர்ணம் தீட்டப்பட்ட பெண்குயின் நனைந்தபடியும்; மெழுகு வர்ணப் பூச்சுத் தீட்டப்பட்ட பெண்குயின் அப்படியே நனையாமல் இருக்குமே!

ஏன் மெழுகுப் பூச்சு மீது விடப்பட்ட தண்ணீர், பேப்பரில் கரையவில்லை?

அதுதான் பெண்குயின் உறையாமல் இருப்பதற்கும் காரணம்!

பெங்குயின்கள் தங்கள் வால் அருகே உள்ள ஒரு சுரப்பியிலிருந்து எண்ணெயை உற்பத்தி செய்கின்றன. அதனை தங்கள் இறகுகளின் மேல் பரப்புகின்றன.

இது இறகுகளுக்கு ஒரு மெழுகுப்பூச்சை அளிக்கிறது. இது நீர் மூலக்கூறுகளால் ஆன குளிரை விரட்டுகிறது.

இந்த மிக எளிமையான அறிவியல் செயல்பாடு, மெழுகுப் பூச்சு பெண்குயின்களை அவற்றின் சுற்றுச்சூழலின் கடுமையான குளிரில் இருந்து எவ்வாறு பாதுகாக்கிறது என்பதை நிரூபிக்கிறது.

# சோழர் குலத்தின் சரிவு; சிற்றரசனின் வெற்றி

**தாத்தா:** முதலாம் கோப்பெருஞ்சிங்கன்னு ஓர் அரசர். அவர் சோழப் பேரரசரையே கைது செய்து, சிறை வச்ச கதை தெரியுமா?

**ஹரிணி:** எப்படி தாத்தா? அவ்வளவு வீரம் படைத்தவரா அவர்? அவர் எந்த ஊரை ஆட்சி செய்தார்? சிறை செய்யப்பட்ட அரசர் யார்?

**தாத்தா:** கோப்பெருஞ்சிங்கன், பல்லவர்களின் வழித்தோன்றலான காடவராயர் மரபைச் சேர்ந்தவர். இவரோட தலைநகரம் சேந்தமங்கலம். விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் இருக்கிறது, இந்த ஊர். இவர் சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்தார். மூன்றாம் ராஜராஜ சோழன் (1216 – 1242) காலத்தில் சோழ அரசு மிகவும் பலவீனமாக இருந்தது. அதாவது அந்த அரசர் வலிமை மிக்கவராக இல்லை. நாலா பக்கமும் எதிரிகள் இருந்தார்கள். இந்த நேரத்தில் பாண்டிய அரசர், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் அடிக்கடி படையெடுத்து சோழ நாட்டைச் சூறையாடிக்கொண்டிருந்தார்.

**ஹரிணி:** சரி கோப்பெருஞ்சிங்கன் ஏன் மூன்றாம் ராஜராஜனைக் கைது செய்யணும்?

**தாத்தா:** முழுசா கேளு. பாண்டிய அரசர் கூடச் சண்டையிட்டு, தோல்வி அடைந்த மூன்றாம் ராஜராஜன் தப்பித்துச் செல்வதற்காகத் தன் படைகளுடன் சென்று கொண்டிருந்தார். இதை அறிந்த கோப்பெருஞ்சிங்கன் தன் படைகளுடன் சென்று (தெள்ளாறு என்னும் ஊரில்) அவரை வழி மறித்து கைது செய்தார். தன் தலைநகரான சேந்தமங்கலத்தில் சிறை வைத்து விட்டார் (பொ.யு. 1231).




**ஹரிணி:** அவருக்குக் கீழ்தானே கோப்பெருஞ்சிங்கன் இருந்தார்? அப்படி இருக்கும் போது இப்படிக் கைது செய்யலாமா?


கோப்பெருஞ்சிங்கன்

**தாத்தா:** அவருக்கு அரசியல் அதிகாரம்தான் முக்கியமாக இருந்தது. தான் சுதந்திர மன்னனாக ஆட்சி செய்ய வேண்டும் என்ற விருப்பம்தான் இருந்தது. அதனால் தனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் போது அதைப் பயன்படுத்திக்கொண்டார். அதுவும் இல்லாமல் தன் மனைவியின் சகோதரன்தான் இந்த மூன்றாம் ராஜராஜன். அதாவது மூன்றாம் குலோத்துங்கனின் மகன்தான் மூன்றாம் ராஜராஜன். ராஜராஜனின் உடன் பிறந்த சகோதரியைத்தான் கோப்பெருஞ்சிங்கன் மணம் முடித்து இருந்தார்.

**பேத்தி:** அப்புறம் என்ன ஆச்சு? சோழ மன்னரை யார்தான் காப்பாற்றினார்கள்?

**தாத்தா:** சோழர்களின் நட்பு நாடாக இருந்த ஹொய்சாள மன்னர் (கர்நாடகத்தின் இன்றைய பேளூர், ஹளபேடு பகுதிகள். அன்று துவாரசமுத்திரம்) இரண்டாம் வீர நரசிம்மன் சோழர்களுக்கு உதவ முன்வந்தார். ஹொய்சாளப் படையின் பலம் அறிந்திருந்த கோப்பெருஞ்சிங்கன், மூன்றாம் ராஜராஜனை விடுதலை செய்து விட்டார்.

**ஹரிணி:** கோப்பெருஞ்சிங்கன், அந்தப் பெரிய மன்னரைச் சிறை பிடிச்சதுக்குப் பின்னால பெரிய அரசியல் இருந்திருக்கு, இல்லையா தாத்தா?

**தாத்தா:** ஆமா. கோப்பெருஞ்சிங்கனின் இந்தச் செயல், சோழப் பேரரசு இனி மீண்டும் பழையபடி வலிமையடையாது என்பதை உலகுக்கு உணர்த்தியது. இது ஒரு திருப்புமுனை நிகழ்வு.

## கூடுதல் தகவல்கள்


கற்குதிரைகள்

- உளுந்தூர்ப்பேட்டை பக்கம் போகும் போது, சேந்தமங்கலத்துக்குப் போய் பாருங்கள். அங்கே காடவராயர் கட்டிய கோட்டை மதில் சுவருடன் கூடிய கோயில் இருக்கிறது.
- உடலில் எங்கு தட்டினாலும் வெவ்வேறு ஒலிகளை எழுப்பக்கூடிய கற்குதிரைகளும் அங்கே உண்டு.
- கோப்பெருஞ்சிங்கனின் சிலை சிதம்பரம் நடராஜர் கோயில் சுவரில் இருக்கிறது. இவர் சிதம்பரம் நடராஜர் கோயிலின் தெற்கு கோபுரத்தைக் கட்டியவர்.
- இவரது காலம் 13ஆம் நூற்றாண்டு.



# புகைப் படியாத விளக்கு

கோயில்களில் உள்ள கல்வெட்டுகளில் தானங்கள் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அதில் விளக்கு தானம், நில தானம், ஆடு மாடுகள் தானமும் அடங்கும். சோழர்கள் காலத்தில் குற்றம் செய்தவர்களும் கூட, தண்டனையாக ஆடு மாடுகளை கோயில்களுக்குத் தானம் வழங்கும் முறை இருந்துள்ளது. ஆடு, மாடுகள் மூலம் கிடைக்கும் பால் (அபிஷேகம்) நெய் (விளக்கு) போன்றவற்றை கோயில்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

இலுப்பை விதைகளில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணெய், கோயில் கருவறைகளில் உள்ள நந்தா விளக்கு எரிக்கப் பயன்படுத்தப்பட்டது. கருவறையில் அதிகம் புகைப் படியாமல் இருக்க இந்த ஏற்பாடு.

வழக்கமாக விளக்குகளில் கீழே எண்ணெய் ஊற்றி, அதில் திரி அமைத்து எரிவது போல் இருக்கும். ஆனால் நந்தா விளக்குகளில் எண்ணெய் ஊற்றும் பகுதி மேலே இருக்கும். சுடர் திரியானது, கீழே ஏற்றும் வகையில் இருக்கும். எண்ணெய் கொள்ளளவை பொறுத்து, இந்த விளக்கானது ஒரு வாரம் வரை கூட எரியும்.

அந்தக் காலத்தில் தீப்பெட்டி, லைட்டர் போன்ற பொருட்கள் இல்லை. அதனால் சட்டென்று விறகு அடுப்பு பற்ற வைக்க, இந்த எண்ணெய் விளக்குகள் பயன்பட்டன. வறுமை, பஞ்சம், பேரிடர் காலங்களில் கோயில் விளக்குகளில் இருந்து தீ வாங்கப்பட்டு, உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டது.

– மதுரை வீரன்

# நான்கு சாக்லெட்டுகள்

● கீர்த்தி ரமேஷ்

மைதானத்திற்கு வந்த பிறகும் விளையாட வராமல் வெகுநேரமாக ஆதிரா மரத்தடியிலேயே அமர்ந்திருப்பதைக் கவனித்தாள் அவளது வகுப்புத் தோழி நஸ்ரியா.

எட்டாவது படிக்கும் ஆதிரா எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள். ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போதே எழும் சந்தேகங்களைக் கேட்பாள். விளையாட்டு என்றால் முதலில் பந்தைத் தூக்கிக் கொண்டு மைதானத்திற்குள் ஓடுவாள்.

ஆனால் இன்று ஆதிரா விளையாட வரவில்லை. தூரத்தில் எதையோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

“என்ன ஆச்சு ஆதிரா? ஏன் விளையாட வராம சோர்வா உட்கார்ந்திருக்கே? உடம்பு சரியில்லையா?” என்று கேட்டபடி அருகில் வந்த நஸ்ரியா ஆதிராவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை” என்றாள் ஆதிரா.

“அப்புறம் ஏன் இப்படி உட்கார்ந்திருக்கே? எதுவானாலும் என்கிட்டே சொல்லு” என்றாள் நஸ்ரியா.

“போன மாசம் ஸ்கூல்ல நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நேற்று பரிசு கொடுத்தாங்க. நீ நேற்று ஸ்கூலுக்கு வரலைல. எனக்கு மூன்று போட்டிகளில் பரிசு கிடைச்சுது” என்றாள் ஆதிரா.

“ஆஹா, மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறாயா? அபாரம் ஆதிரா. டீச்சர்ஸ், உன்னோட அம்மா அப்பா எல்லாரும் விஷ் பண்ணினாங்கல்ல?” நஸ்ரியா கேட்டதும்,

“ம்ம்” என்று உற்சாகமில்லாமல் பதில் சொன்னாள் ஆதிரா.

“ஏய் ஆதி, மூன்று போட்டிகளில் உனக்குத்தான் முதல் பரிசு. அப்புறமும் ஏன் உன் முகத்துல உற்சாகமே இல்லை?” என்று கேட்டாள் நஸ்ரியா.

நஸ்ரியாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் ஆதிரா.

“நஸ்ரி, நான் கட்டுரை, ஓவியம், பாட்டு, சொற்பொழிவுன்னு நாலு போட்டிகளில் கலந்துகிட்டேன் தெரியுமா? ஆனா எனக்கு மூன்று பரிசுகள்தான் கிடைச்சிருக்கு. ஓவியத்துக்காக எனக்கு எந்தப் பரிசும் கிடைக்கல” என்று தலையைக் குனிந்தபடி சொன்னாள் ஆதிரா.

“ஓவியத்துக்கான பரிசு யாருக்குக் கிடைச்சுது?” என்று நஸ்ரியா கேட்டாள்.

“நம்ம வகுப்பு சுனிதாவுக்குக் கிடைச்சது” என்று வருத்தமாகச் சொன்னாள் ஆதிரா.

சிறிது நேரம் ஆதிராவின்



முகத்தைப் பார்த்த நஸ்ரியா எதுவும் சொல்லாமல் எழுந்து போனாள். சற்றுநேரத்தில் திரும்பி வந்து, “ஆதிரா, இதோ நீ மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறாய் அல்லவா? அதற்காகத்தான் இது” என்றபடி ஆதிராவின் கையில் எதையோ கொடுத்தாள்.

நஸ்ரியா கொடுத்ததைக் கையில் வாங்கிய ஆதிரா அது என்னவென்று பார்த்தாள். அழகான வண்ணக் காகிதங்களில் பொதியப்பட்ட நான்கு சாக்லெட்டுக்கள்.

சாக்லெட்டுக்களைப் பார்த்ததும் ஆதிராவின் கண்கள் விரிந்தன. அவள் முகத்தில் லேசான மகிழ்ச்சி வந்தது.

அவள் ஆசையாக ஒரு சாக்லெட்டின் காகிதத்தைப் பிரித்தாள். அடுத்த நிமிடமே அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. வண்ணக் காகிதத்தின் உள்ளே சிறிய கல் இருந்தது.

“நஸ்ரி, இதென்ன சாக்லெட் கவருக்குள்ளே கல் இருக்குது?” என்று கேட்டாள் ஆதிரா.

“அட கல்லா இருக்கிறது? மற்ற சாக்லெட்டுக்களையும் பிரித்துப் பார்” என்றாள் நஸ்ரியா.

ஆதிரா மற்ற மூன்று சாக்லெட் கவர்களையும் பிரித்துப் பார்த்தாள். மூன்றின் உள்ளேயும் சாக்லெட் இருந்தன.

“சரி ஆதிரா, இந்தக் கல்லை என்ன பண்ணப் போறே?” என்று கேட்டாள் நஸ்ரியா.

“கல்லை சாப்பிட முடியுமா?” என்றபடி கல்லை மைதானத்தில் எறிந்துவிட்டு, கையிலிருந்த சாக்லெட்டுக்களில் ஒன்றை எடுத்து வாயில் போட்டாள் ஆதிரா.

ஆதிரா செய்ததைப் பார்த்த நஸ்ரியா சிரித்தாள்.

“ஆதிரா, நான் இப்போ எதற்காக நான்கு சாக்லெட்டுகளைக் கொண்டு வந்து உனக்குக் கொடுத்தேன் தெரியுமா?” என்று கேட்டாள் நஸ்ரியா.

“நான் மூன்று போட்டிகளில் பரிசுகள் பெற்றதற்குன்னு சொன்னாய் அல்லவா”

“ஆனால் நான் நான்கு சாக்லெட்டுக்கள் கொண்டு வந்தேனே. அது எதுக்காகன்னு தெரியுதா?” நஸ்ரியா கேட்க, பதில் தெரியாமல் யோசித்தாள் ஆதிரா.

“ஆதிரா, நீ நான்கு போட்டிகளில் நீ கலந்துகிட்டேல்ல. அதுக்காகத்தான் நான்கு சாக்லெட்டுக்கள் கொண்டு வந்தேன். நான்கு சாக்லெட்டுக்களில் ஒண்ணு கல். அதை தூக்கி வெளியே போட்டுட்டே. மூணு சாக்லெட்டுக்களை மட்டும்தான் நீ சாப்பிடுவே. அப்படித்தானே?”

“ஆமா. அப்போ எனக்குப் பரிசு கிடைக்காத போட்டிதான் அந்தக் கல்லா?” ஆதிரா நஸ்ரியாவிடம் கேட்டாள்.

“அப்படித்தான் வச்சுக்கோ. உனக்குக் கிடைச்ச மூணு பரிசுகளை நினைச்சு நீ மகிழ்ச்சி அடையணும். அதைவிட்டுட்டு ஒரு பரிசைத் தவற விட்டுட்டோமேன்னு வருத்தப்படலாமா?” நஸ்ரியா கேட்டது ஆதிராவுக்குக் கொஞ்சம் புரிவது போல இருந்தது.

“ஆதிரா, போட்டிகள்ல கலந்துகிடும்போது நம்மால முடிந்த அளவு முயற்சி செய்யணும். திறமை இருக்கிறவங்க வெற்றி பெறுவாங்க. நமக்கு மட்டுமே வெற்றி கிடைக்கணும்னு நினைக்கலாமா? நம்மளை மாதிரியே திறமையானவங்க பலபேர் இருப்பாங்கல்ல” நஸ்ரியா கேட்டாள்.

“ம்ம், சுனிதா நிஜமா நல்லா ஓவியம் வரைவா” ஆதிரா சொன்னாள்.

“அதனாலதான் அவளுக்கு ஓவியப் போட்டியில முதல் பரிசு கிடைச்சிருக்கு. இப்போ அடுத்த கேள்வி கேட்குறேன். இப்போ சுனிதா இங்கே வந்தா, நீ என்ன செய்வே ஆதிரா?” நஸ்ரியா கேட்க,

“சுனிதாவுக்கும் ஒரு சாக்லெட் கொடுப்பேன். ரெண்டு பேரும் சேர்ந்தே சாக்லெட் சாப்பிடுவோம்” மகிழ்ச்சியாய்ச் சொன்னாள் ஆதிரா.

“வெற்றியும் சாக்லெட் மாதிரிதான். அவரவருக்கான வெற்றி அவரவருக்குக் கிடைக்கும். இப்போ சுனிதாவைக் கூப்பிடுறேன். அவள் வந்ததும் ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்கு அவளைப் பாராட்டி ஒரு சாக்லெட்டைக் கொடு ஆதிரா” நஸ்ரியா சொல்ல,

“அவளை உடனே கூப்பிடு, நாம சேர்ந்து விளையாடலாம்” உற்சாகமாகச் சொன்னாள் ஆதிரா.

●

# இணைய உலகிலும் இனி நாம் பெஸ்ட்!

இணையத்தில், போனில், கணினியில் நாம் மற்றவர்களுடன் பேசும்போது அல்லது தகவல் அனுப்பும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான நல்ல பழக்க வழக்கங்களே, டிஜிட்டல் ஒழுக்கம் (*Digital Netiquette*). நிஜ வாழ்க்கையில், நீங்கள் மற்றவர்களிடம் காட்டும் மரியாதையை, டிஜிட்டல் உலகிலும் காட்டுவது மிகவும் அவசியமாகிறது.

### டிஜிட்டல் ஒழுக்க ஏன் முக்கியம்?

**தவறான புரிதல்களைத் தடுக்கிறது:** எழுத்து வடிவிலான தகவல்தொடர்புகளில், உடல்மொழி மற்றும் குரலின் தொனி இல்லாததால், தகவல்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம். தெளிவான, மரியாதையான மொழி இந்த அபாயத்தைக் குறைக்கிறது.

**தொழில்முறையையும் நற்பெயரையும் பராமரிக்கிறது:** உங்கள் ஆன்லைன் செயல்பாடுகள் பெரும்பாலும் நிரந்தரமானவை. இவை உங்கள் தொழில் அல்லது கல்வி வாய்ப்புகளைப் பாதிக்கலாம்.

**நேர்மறையான தொடர்புகளை வளர்க்கிறது:** இணையத்தில் அனைவருக்கும் மரியாதையான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்க உதவுகிறது.

**மற்றவர்களின் நேரத்தை மதிக்கிறது:** சுருக்கமாகவும், ஆழமான சிந்தனையுடனும் எழுதுவது, பெறுநரின் நேரத்தின் மற்றும் கவனத்தின் மீது நீங்கள் அக்கறை காட்டுவதைக் காட்டுகிறது.

டிஜிட்டல் குடியுரிமை 4

**பின்பற்ற வேண்டிய முக்கிய விதிகள்:**

### 1. பேசும் முறை

- நிஜ நண்பரிடம் பேசுவது போலவே, ஆன்லைனிலும் கனிவாகப் பேசுங்கள். யாரையும் கேலி செய்யாதீர்கள், சண்டையிடும் விதமாகப் பேசாதீர்கள்.
- ஒரு மெசேஜ் அல்லது கமெண்ட் அனுப்பும் முன், அதை ஒருமுறை படித்துப் பாருங்கள். 'இதை நேரில் சொன்னால் சரியாக இருக்குமா?' என்று யோசித்துச் செய்யுங்கள்.
- எல்லா எழுத்துகளையும் பெரிய எழுத்தில் டைப் செய்யாதீர்கள். இது, நாம் கோபத்தில் கத்துவது போல் இருக்குமாம்.




- உங்கள் நண்பர்கள், ஆசிரியர்கள் அல்லது மற்றவர்களுக்கு மெசேஜ் அனுப்பும்போது, எழுத்து மற்றும் இலக்கணப் பிழைகள் இல்லாமல் தெளிவாக எழுதப் பழகுங்கள்.

### 2. ரகசியம் பாதுகாத்தல்

- உங்கள் நண்பரின் தனிப்பட்ட போட்டோக்கள், முகவரி அல்லது தனிப்பட்ட மெசேஜ்களை, அவரது அனுமதி இல்லாமல் யாருக்கும் அனுப்பாதீர்கள்.
- வதந்திகள் அல்லது போலிச் செய்திகளைப் பார்த்தால், அது உண்மைதானா என்று பெரியவர்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே பகிரவும். தெரியாத செய்திகளைப் பகிராமல் இருப்பது நல்லது.
- உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை (இருப்பிடம், தொலைபேசி எண், புகைப்படம்) தெரியாதவர்களிடம் பகிராதீர்கள்.

இந்த விதிகளை நீங்கள் இணையத்தில் கடைப்பிடித்தால், நீங்கள் ஒரு சிறந்த டிஜிட்டல் மாணவராக உருவாகலாம்.

# அச்சு ஊடகம்: தொடுதல் உணர்வின் பலம்!

அச்சு ஊடகத்தின் ஆரம்ப வடிவங்கள், சீனாவில் தோன்றின. மரப் பலகையில் எழுத்துகளைச் செதுக்கி அச்சிடும் முறைகள் (*Woodblock Printing*), பழங்காலத்தில் அங்கு நடைமுறையில் இருந்தன. 15ஆம் நூற்றாண்டில், ஜெர்மனியைச் சேர்ந்த ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் (*Johannes Gutenberg*) என்பவர், அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தது, ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

இந்தப் புரட்சிகரமான தொழில்நுட்பம், தகவல் பெறுவதற்கான அணுகலை எளிதாக்கியது. இது, புத்தகங்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கு வழி வகுத்தது. அச்சு ஊடகம், பலதரப்பட்ட வடிவங்களை உள்ளடக்கியது. ஒவ்வொன்றும், அதன் தனித்துவமான நோக்கம் மற்றும் பயனர்களைக் கொண்டுள்ளது.

### 1. செய்தித்தாள்கள்

இவை, தினசரி அல்லது வாராந்திர அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச அளவில் உடனடி செய்திகளையும் தகவல்களையும் வழங்குகின்றன.

### 2. பத்திரிகைகள்

வாராந்திர, மாதாந்திர அல்லது காலாண்டு போன்ற குறைந்த கால இடைவெளியில் இவை வெளியிடப்படுகின்றன. ஃபேஷன் மற்றும் வாழ்க்கை முறை முதல், அறிவியல் மற்றும் வணிகம் வரை, குறிப்பிட்ட தலைப்புகள் பற்றி ஆழமான செய்திகளை வழங்குகின்றன.

### 3. புத்தகங்கள்

கல்வி, பொழுதுபோக்கு மற்றும் கலாசாரப் பாதுகாப்பிற்கான ஒரு முக்கிய கருவியாகச் செயல்பட்டு, பரந்த அளவிலான பாடங்களைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகின்றன.

### 4. விளம்பரச் சிற்றேடு, ஃபிளையர், கையேடு

ஒரு நிறுவனம், தனது தயாரிப்பைப் பற்றி மக்களிடம் கொண்டு செல்லவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் பயன்படுத்தும் காகித அடிப்படையிலான எளிய வழிகளாக இவை இருக்கின்றன.

மக்கள் ஊடகம் 4



### 5. விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள்

இந்தப் பெரிய வடிவ அச்சுப் பொருட்கள், வெளிப்புற விளம்பரங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, அதிக மக்கள் புழங்கும் பகுதிகளில், பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கம் கொண்டவை.

### 6. செய்திமடல்கள் மற்றும் அட்டவணைகள்

ஒரு குறிப்பிட்ட பார்வையாளர்களுக்கான தகவல்களை இலக்கு வைத்து, செய்திமடல்கள் வழங்குகின்றன. தயாரிப்புகள் அல்லது சேவைகளின் விரிவான பட்டியலை, அட்டவணைகள் வழங்குகின்றன.

**டிஜிட்டல் உலகிலும் நீடித்திருக்கக் காரணம்?**

இன்றைய உலகில், டிஜிட்டல் ஊடகத்தின் அசுர வளர்ச்சி இருந்தபோதும், அச்சு ஊடகம் பல முக்கிய காரணங்களுக்காக நிலைத்து நிற்கிறது.

**ஸ்பரிசத் தன்மை மற்றும் ஈடுபாடு**

அச்சு ஊடகத்தின் பௌதிகத் தன்மை (*Physical presence*), டிஜிட்டல் வடிவங்களால் ஈடு செய்ய முடியாத, உணர்வுப்பூர்வமான அனுபவத்தைத் தருகிறது. அச்சிடப்பட்ட பொருட்களுடன், உணர்ச்சிப்பூர்வமான தொடர்பை வாசகர்கள் கொண்டிருப்பதாக, ஆய்வுகள் கூறுகின்றன.

**நம்பகத்தன்மை**

உண்மைச் சரிபார்ப்புத் தரங்களைக் கொண்ட அச்சுப் பிரசுரங்கள், பல தவறான தகவல்களின் இருப்பிடமாக இருக்கக்கூடிய ஆன்லைன் மூலங்களை விட, அதிக நம்பகமானவை என்று கருதப்படுகின்றன.

**இலக்குடன் சென்றடைதல்**

ஒரு செய்தியை, சரியான குழுவிடம் கொண்டு சேர்க்க உதவுகிறது. உதாரணமாக, ஓர் அறிவியல் இதழில் விளம்பரம் செய்வது, அறிவியலில் மிகுந்த ஈடுபாடுள்ள மாணவர்களை மட்டும் போய்ச் சேர சிறந்த வழி. இதன்மூலம், தேவையுள்ளவர்களைத் துல்லியமாகத் தொடர்புகொள்ளலாம்.

**திரையை விட்டு விலகி இருத்தல்**


எந்நேரமும் கணினி, மொபைல்போன் திரைகளையே (*Digital*) பார்ப்பதால், பலருக்குச் சலிப்பும் களைப்பும் வருகிறது. அதனால், இவற்றில் இருந்து சற்று விலகி, அச்சிடப்பட்ட பொருட்களில் உள்ள தகவல்களுடன் ஈடுபடும் வாய்ப்பை வழங்குகிறது.

# சூரிய குடும்பத்தின் புதிய விருந்தாளி! ஏலியனா?

நமது சூரியக் குடும்பத்தில் கற்களும், வால் நட்சத்திரங்களும் சுற்றி வருவது நமக்குத் தெரியும். ஆனால், சில சமயங்களில் நமது சூரியக் குடும்பத்தையே சாராத, மிகத் தொலைவில் உள்ள வேறு நட்சத்திர மண்டலங்களிலிருந்து சில பொருட்கள் வருவதுண்டு. அந்த வகையில் 'ஒமுவாமுவா' *(Oumuamua)*, 'போரிசோவ்' *(Borisov)* ஆகியவற்றைத் தொடர்ந்து, இப்போது மூன்றாவதாக ஒரு விண்கல் நம் அருகே வந்துள்ளது. '3I/அட்லஸ்' *(3I/Atlas)* என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கல், ஜூலை 2025இல் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப்பாதைக்கு அருகே வந்துள்ள இது விஞ்ஞானிகளையே குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

**மிகப் பழமையான பாறை!**

இந்த விண்கல் டைனோசர்களை அழித்த விண்கல்லை விடப் பெரியது (கிட்டத்தட்ட 11 கி.மீ. அகலம்); ஆனாலும் பயப்படத் தேவையில்லை, இது நம்மைக் கடந்து சென்றுவிடும். இதன் மிகப்பெரிய ஆச்சரியம் அதன் வயதுதான். நமது சூரியக் குடும்பத்தின் வயதே 450 கோடி ஆண்டுகள்தான், ஆனால் இந்தக் கல்லின் வயது ஏறத்தாழ 700 கோடி ஆண்டுகள். அதாவது, நமது சூரியன் பிறப்பதற்கு முன்பே இது உருவாகியுள்ளது. இது கார்பன் டை ஆக்சைடு, சயனைடு, நிக்கல் ஆகியவற்றால் நிரம்பியுள்ளது.



3I/ அட்லஸ்' விண்கல் (தொலைநோக்கியால் எடுத்த புகைப்படம்)



3I/ அட்லஸ் மாதிரி படம்

**விடை தெரியாத மர்மங்கள்!**

அட்லஸ் விண்கல் பல மர்மங்களைச் சுமந்து வந்துள்ளது. முதல் மர்மம், இதன் பச்சை நிறம். பொதுவாக வால் நட்சத்திரங்கள் 'டைகார்பன்' *(Dicarbon)* என்ற மூலக்கூறு சூரிய ஒளியில் படும்போது பச்சை நிறத்தில் ஒளிரும். ஆனால், இந்த விண்கல்லில் டைகார்பன் இல்லவே இல்லை. ஆனாலும் இது எப்படிப் பச்சை நிறத்தில் ஒளிர்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை.

இரண்டாவது மர்மம், அதன் வேகம். மற்ற வால் நட்சத்திரங்கள் சூரியனுக்கு அருகில் வரும்போது, அதிலுள்ள பனிக்கட்டிகள் உருகி, வாயுக்களை வெளியேற்றி, அதன் வேகத்தை மாற்றிக்கொண்டே இருக்கும். ஆனால், இந்த அட்லஸ் விண்கல் மட்டும் ஒரு காரை 'க்ரூஸ் கண்ட்ரோலில்' *(Cruise control)* ஓட்டுவது போல, ஆரம்பத்தில் இருந்து இப்போது வரை மிகச் சீரான வேகத்தில் பயணம் செய்கிறது.


**ஏலியன் ஸ்பேஸ்ஷிப்பா?**

இந்த மர்மங்களால்தான் பல கேள்விகள் எழுகின்றன. சீரான வேகம் என்பது ஒரு இன்ஜின் இருப்பதைக் குறிக்கிறதா? நிக்கல், கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம் என்பது ஒரு ராக்கெட் எரிபொருளா? அந்தப் பச்சை நிறம் ஏலியன்களின் வெளிச்சமா? எல்லாவற்றிற்கும் மேலாக, பல ஆண்டுகளுக்கு முன்பு நம்மைக் குழப்பிய 'வாவ் சிக்னல்' *(WOW! Signal)* வந்த திசையிலிருந்தே இதுவும் வருகிறது. இதனால், இது ஒரு ஏலியன் ஸ்பேஸ்ஷிப் ஆக இருக்குமோ என்று சிலர் சந்தேகிக்கின்றனர்.

இது ஏலியன் ஸ்பேஸ்ஷிப்பாக இருக்க வாய்ப்பு மிக மிகக் குறைவு என்றே விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இது 700 கோடி ஆண்டுகள் பழமையானது என்பதால், நமக்குத் தெரியாத ஓர் இயற்கையான அமைப்பைக் கொண்டிருக்கலாம். செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பெர்சவரன்ஸ் ரோவர் *(Perseverance Rover)* ஏற்கெனவே இதைப் புகைப்படம் எடுத்துள்ளது.

வரும் டிசம்பர் மாதம், இந்த மர்மமான பச்சை விண்கல்லை நாம் வெறும் கண்களால் கூடப் பார்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

– தியா



# புயல் புதிர்

இங்கு தமிழகத்தை, இதுவரை தாக்கிய சில புயல்களைப் பற்றிய புதிர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெயரைக் கண்டுபிடியுங்கள்



**1**

நான் 2011இல் வந்து கடலூரையும் புதுச்சேரியையும் வாட்டி எடுத்தேன். தென்னை மரங்களை வேரோடு சாய்த்து விவசாயிகளுக்குத் துயரம் தந்தேன்.

நான் யார்?

**2**

நான் 2016இல் சென்னை நகரைத் தாக்கி, பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினேன். எத்தனையோ மரங்களை வேரோடு சாய்ந்தபோதும். அதி தீவிர புயலாக நான் மறக்க முடியாதவன்.

நான் யார்?

**3**

நான் தென் தமிழகத்தின் முனையான கன்னியாகுமரியை வதைத்தவன். என்னால் மீனவர்கள் பலர் கடலில் காணாமல் போயினர். நான் 2017இல் வீசினேன்.

நான் யார்?

**4**

நான் 2018இல் டெல்டா மாவட்டங்களை வெகுவாகத் தாக்கினேன். நாகை, தஞ்சை மாவட்டங்களில் நான் தென்னையைச் சாய்த்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்தேன்.

நான் யார்?

**விடைகள்**

1. தானே புயல் [2011]
2. வர்தா புயல் [2016]
3. ஒக்கி புயல் [2017]
4. கஜா புயல் [2018]

# அழைப்பிதழ் தயாரிப்பு

உங்கள் பள்ளியில் ஒரு விழா நடக்க உள்ளது. அதை நடத்துவதில் மாணவர் பிரதிநிதிகள் குழுத் தலைவராக உங்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த விழாவின் ஒரு பகுதியாக அரங்க நிகழ்ச்சி ஒன்று நடக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அந்த நிகழ்ச்சிக்கு ஓர் அழைப்பிதழ் வடிவமைக்கும்படி ஆசிரியர் உங்களிடம் சொல்லிவிட்டார்.

நீங்கள் என்ன என்ன வேலைகள் செய்ய வேண்டும் என்பது தெரியுமா? இதோ தெரிந்துகொள்ளுங்கள்.

முதலில் அந்த நிகழ்ச்சியில் யாரெல்லாம் கலந்துகொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். அதை ஆசிரியர்களே சொல்வார்களா அல்லது நீங்களும் சில ஆளுமைகளைப் பரிந்துரைக்கலாமா என்று பாருங்கள்.

யார் யார் கலந்துகொள்கிறார்கள் என்று முடிவான பிறகு, யாருக்கு என்ன தலைப்பு என்பதை முடிவு செய்ய வேண்டும். அந்த விவரங்களை வாங்கிக்கொள்ளுங்கள்.

எந்தத் தேதியில் விழா, அன்று என்ன கிழமை, நிகழ்ச்சி நேரம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். பள்ளியின் எந்த இடத்தில் நடக்கிறது என்பது முக்கியம். இடையில் தேநீர் வழங்கப்படுமா, ஆம் எனில் அதற்கான நேரத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

இப்போது கீழ்க்கண்ட விவரங்கள் உங்களுக்குக் கிடைக்கின்றன:

மூன்று பேர் பேசுகிறார்கள். ஒருவர், மாவட்ட ஆட்சியர் பிஸ்வாஸ். கல்வியின் அவசியம் குறித்துப் பேசுகிறார். அடுத்தவர் பள்ளித் தாளாளர் காத்தமுத்து. மாணவர்கள் செய்யக்கூடிய சாதனைகளைப் பற்றி எடுத்துரைக்கிறார். மூன்றாவதாக, இன்ஸ்டாகிராம் பிரபலம் ராக்கேஷ், கணிதப் பாடம் சுவையானது என்பதைப் பற்றி விளக்கம் கொடுக்கிறார்.

மாணவர் சங்கச் செயலாளரும் வணிகவியல் பிரிவு மாணவருமான கீர்த்தி நன்றி கூறுகிறார்.

இதற்கான அழைப்பிதழை இப்போது தயாரித்துப் பார்ப்போம் வாருங்கள்.

முதலில் அழைப்பிதழின் பின்னணி எப்படி இருக்க வேண்டும் என்று முடிவெடுங்கள். மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதம் போன்ற டிசைன் என்று வைக்கலாம்.

**நிகழ்ச்சிக்கு ஒரு தலைப்பு வைக்கலாம். 'பெரியோர் சொல் கேளீர்.' அவரவர் பேச்சுகளுக்கும் குட்டிக் குட்டித் தலைப்புகள் தரப்பட வேண்டும்.**

### அழைப்பிதழ்

## பெரியோர் சொல் கேளீர்

மாணவருக்கான சான்றோர் உரையரங்கம்

சிறப்புச் சொற்பொழிவுகள்:

**கல்வியே கண்**

உரையாளர்: திரு.**பிஸ்வாஸ்** அவர்கள்

மாவட்ட ஆட்சியர்

**நீங்களே சாதனையாளர்**

உரையாளர்: திரு.**காத்தமுத்து** அவர்கள்

கா.க. மே. பள்ளித் தாளாளர்

**கணிதமா கற்கண்டா**

உரையாளர்: திரு.**ராக்கேஷ்** அவர்கள்

சமூக வலைதளப் பிரபலம், கணித மன்றச் செயலர்

**நன்றியுரை:** மாணவர் சங்கச் செயலர் **கோ.கீர்த்தி**

(12ஆம் வகுப்பு, கணிதவியல் பிரிவு)

**இடம்:** உவேசா அரங்கம், கா.க.மே. பள்ளி

**நாள்:** நவம்பர் 04, 2025

**நேரம்:** காலை 10:30 முதல் 12:30 வரை

(10:15க்குத் தேநீர் உபசரிப்பு)

அனைவரும் வருக; கருத்தமுது பருக!

# வேறு மொழிக் கலப்பு

**நா**ம் அன்றாடம் பேசும் பேச்சுக்களில் ஆங்கிலம் கலந்தே வருகிறது. இது கேட்பதற்கு அழகாக இல்லை. தமிழில் உரிய சொற்கள் இல்லாத போது, வேற்றுமொழிச் சொற்களைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், தமிழிலேயே சொல்ல முடிந்த பல செய்திகளை, ஆங்கிலம் கலந்துதான் பேச வேண்டுமா என்று யோசியுங்கள். இந்தப் பட்டியலைப் படித்துப் பாருங்களேன்.

உரையாடல்

- ஹலோ நண்பா!
- ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?
- ஆமாம். நான் இப்போ மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜெக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?
- அந்த காலேஜ்லதான் என் தம்பி ஃபர்ஸ்ட் இயர் படிக்கிறான்.

ஆங்கிலச் சொற்கள்

- Hello
- Ten years
- Multi national Company Project Manager
- College First year

இணையான தமிழ்ச் சொற்கள்

- வணக்கம் நண்பா!
- பத்து ஆண்டு ஆச்சு
- பன்னாட்டு நிறுவனத்துல திட்ட மேலாளரா இருக்கேன்.
- அந்தக் கல்லூரியிலதான் முதலாம் ஆண்டு



# பழமொழி நிரப்பு

**நா**ம் கதையோ கட்டுரையோ எழுதும்போது அதை சுவையாக மாற்ற பழமொழிகள் உதவும். சும்மாப் பேசிக்கொண்டிருக்கும்போது கூட இடையிடையே ஒரு பழமொழி சொன்னால் ரசிக்கத் தக்கதாக இருக்கும்.

இங்கே சில பழமொழிகளின் ஒரு பகுதி தரப்பட்டு உள்ளது. பக்கத்திலேயே ஒரு குறிப்பும் உண்டு. குறிப்பை வைத்து பழமொழியை நிரப்புங்கள்.

| | |
|---|---|
| 1. அன்னம் இட்ட வீட்டில் ______? | நம்பிக்கைத் துரோகம் |
| 2. ஆலும் வேலும் _____ ___ | நாலடியார், திருக்குறள் ஆகிய நூல்களின் சிறப்பு. |
| 3. ஆனைக்கொரு காலம் வந்தா ___ _ | வாய்ப்பு வரும் என்ற நம்பிக்கை. |
| 4. ஊர்வாயை மூட ____ ___ | பிறரின் வம்புப் பேச்சைப் பொருட்படுத்த வேண்டாம். |
| 5. ஏட்டுச் சுரைக்காய் ____ ____ | வெறும் பேச்சால் பயனில்லை. |



1. அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?
2. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
3. ஆனைக்கொரு காலம் வந்தா பூனைக்கொரு காலம் வரும்
4. ஊர்வாயை மூட உலைமூடி இல்லை
5. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது


# 65 வயதில் நான்கு உலக சாதனை!

வயது என்பது ஒரு தடை அல்ல என்பதற்குச் சிறந்த உதாரணம், பிரிட்டனைச் சேர்ந்த மார்ட்டின் பரோன்ஸ்! இவருக்கு இப்போது, 65 வயது. இவர் சமீபத்தில், பளு தூக்கும் (Powerlifting) போட்டிகளில், நான்கு உலகச் சாதனைகளைப் படைத்துள்ளார். இவர், 18 மாதங்களுக்கு முன்புதான், இதற்கான பயிற்சியையே தொடங்கியுள்ளார்!

**தற்செயல் பயணம்**

பரோன்ஸ் ஒரு முழுநேரக் கல்வி ஆராய்ச்சியாளர். ஒருநாள், சாதாரணமாகத் தனது தோழியுடன் ஜிம்மிற்குச் சென்றார். அங்கே, பளு தூக்கிப் பார்த்தபோது, இவரால் தனது வயதுக்கு மீறிய அதிக எடையைத் தூக்க முடிந்தது. இந்தத் தற்செயலான ஜிம் விஜயம்தான், இவருக்குள் இருந்த திறமையைக் கண்டுபிடிக்க உதவியது.

இவருக்கு மூன்று பிள்ளைகள் மற்றும் நான்கு பேரக்குழந்தைகள் உள்ளனர். முழுநேர வேலையுடன், வாரத்தில் ஐந்து நாட்கள், தினமும் இரண்டு மணி நேரம் கடுமையான பயிற்சி செய்கிறார். இவர் பளு தூக்கத் தொடங்கிய இரண்டு வருடங்களுக்குள், உலகெங்கிலும் நடந்த பெரிய போட்டிகளில் வென்றுள்ளார்.




மார்ட்டின் பரோன்ஸ்

- 2024 உலக சாம்பியன்ஷிப் – அயர்லாந்து;
- ஐரோப்பிய சாம்பியன்ஷிப் – ஃபின்லாந்து மற்றும் போலந்து;
- உலகப் பவர்லிஃப்டிங் சாம்பியன்ஷிப் – அமெரிக்கா என, பல நாடுகளில் வெற்றிகளைப் பதிவு செய்து, பல கோப்பைகளை வென்றுள்ளார்.

**உலகச் சாதனைகள்**

இந்தப் போட்டிகளின் மூலம், பரோன்ஸ் வெறும் கோப்பைகளை மட்டும் வெல்லவில்லை. ஏற்கெனவே இருந்த உலகச் சாதனைகளின் எடையை அதிகமாக்கி, புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

**ஸ்குவாட் (squat):** 100 கிலோ (பழைய சாதனையைவிட 10 கிலோ அதிகம்)

**டெட்லிஃப்ட் (deadlift):** 155 கிலோ (பழைய சாதனையைவிட 7.5 கிலோ அதிகம்)

**பெஞ்ச் பிரஸ் (Bench press):** 57.5 கிலோ (127 பௌண்ட்)

**மொத்த பளு:** 312.5 கிலோ (அனைத்து தூக்கும் எடைகளின் மொத்தச் சாதனை)

இவ்வளவு பெரிய எடைகளை, ஒரு 65 வயது பெண் தூக்கியது, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

எந்த வயதிலும், எந்தச் சூழ்நிலையிலும் நாம் விரும்பியதைச் செய்ய ஆரம்பிக்கலாம். திறமை எங்கேயும் ஒளிந்திருக்கலாம். புதிய விஷயங்களை முயற்சி செய்யும்போது அது வெளிப்படும். தொடர்ந்து முயற்சி செய்தால், நிச்சயம் வெற்றி பெறலாம்.

விளையாட்டு

# ஒருங்கிணைந்த தற்காப்புக் கலை!

மிக்ஸட் மார்ஷியல் ஆர்ட்ஸ் (Mixed Martial Arts – MMA) என்பது, ஒரு முழுமையான சண்டை விளையாட்டு. இதில், போட்டியாளர்கள் பலவிதமான சண்டை கலைகளின் நுட்பங்களைப் பயன்படுத்தி, ஒருவரையொருவர் எதிர்த்துப் போராடுவார்கள்.

இதில், நின்று சண்டையிடுவது (Striking), கீழே தள்ளி சண்டையிடுவது (Takedowns) மற்றும் தரையில் சண்டையிடுவது (Ground Fighting) என, மூன்று முக்கியமான பிரிவுகள் உள்ளன.

குத்துச்சண்டை (Boxing), கிக் பாக்ஸிங் (Kickboxing), மல்யுத்தம் (Wrestling), பிரேசிலியன் ஜியுஜுட்சு (Brazilian JiuJitsu), மூய் தாய் (Muay Thai), ஜூடோ (Judo) போன்ற பல்வேறு சண்டைக் கலைகளின் நுட்பங்கள், இந்த விளையாட்டில் இடம்பெறுகின்றன.

போட்டிகள் பொதுவாக, 'கேஜ்' (cage) அல்லது 'ஆக்டகான்' (Octagon) எனப்படும் எட்டுப் பக்கங்களைக் கொண்ட ஒரு வளையத்திற்குள் நடத்தப்படுகின்றன. ஆரம்பக் காலங்களில், வீரர்கள் சண்டையிடும் மேடைக்குள், பார்வையாளர்கள் யாரும் நுழைந்துவிடாமல் தடுக்க, மேடையைச் சுற்றி மின்வேலி, சுறா மீன்கள் உலவும் அகழிகள் அமைக்கப்பட்டு இருந்தன.

தற்போது, அமெரிக்கா, பிரேசில், ஐரோப்பா, ஆசிய நாடுகளில், இந்த விளையாட்டு மிகவும் பிரபலமாக உள்ளது.

**முன்னோடி விளையாட்டுகள்:**

எம்எம்ஏ விளையாட்டு, பழங்காலத்தில் இருந்த சில விளையாட்டுகளின் அடிப்படையில் இருந்து தோன்றியது. அவை:

**பேன்க்ரேஷன் (Pankration):** பொ.யு.மு. 648ஆம் ஆண்டில், கிரேக்கத்தில் புழக்கத்தில் இருந்த இந்த விளையாட்டில், மல்யுத்தம், குத்துச்சண்டை ஆகியவற்றின் அம்சங்கள் கலந்திருந்தன.

**வேல் டுடோ (Vale Tudo):** 20ஆம் நூற்றாண்டில் உருவான, பிரேசில் நாட்டுத் தற்காப்புக் கலையான இதில், பிடிகள், தாக்குதல்கள் போன்றவை அதிவிரைவாக நிகழ்த்தப்பட்டன.

**இன்றைய விளையாட்டு:**

தற்போது, போட்டியாளர்கள் எடையின் அடிப்படையில், எம்எம்ஏ போட்டிகள் நடத்தப்படுகின்றன. 3 அல்லது 5 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில், ஒவ்வொரு சுற்றும், 5 நிமிடங்களுக்கு நடக்கும். முகக்கவசம், இடைக்கவசம், கையுறைகளை அணிவது அவசியம்.

**வெற்றி பெறும் வழிகள்:**

**நாக் அவுட் :** எதிரிகளைத் தாக்கி நினைவிழக்கச் செய்வது.

**அடிபணிவது:** கை அல்லது கால்களைத் தட்டியோ, வாய்மொழி மூலமாகவோ எதிராளியிடம் தனது தோல்வியை ஒப்புக்கொள்வது.



**தொழில்நுட்ப நாக் அவுட்:** ஒரு போட்டியாளரால் தொடர்ந்து சண்டையிட முடியாத நிலையில், நடுவர் போட்டியை நிறுத்திவிடுவது.

**முடிவெடுத்தல்:** புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி, தோல்விகளை நிர்ணயிப்பது.

**தடை செய்யப்பட்டவை:**

தலையின் பின்புறம், முதுகெலும்பு, தொண்டை, கண்கள் போன்றவற்றைத் தாக்குவது, எதிராளியின் தலைமுடியைப் பிடித்து இழுப்பது, கால் விரல்களைத் திருகுவது.

**போட்டி அமைப்புகள்**

அல்டிமேட் ஃபைட்டிங் சாம்பியன்ஷிப்: 1993ஆம் ஆண்டு, ரோரியன் கிரேஸி (Rorion Gracie), ஆர்ட் டேவி (Art Davie), பாப் மெய்ரோவிட்ஸ் (Bob Meyrowitz) ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த அமைப்பு, உலகளவில் விளையாட்டை நடத்திப் பிரபலமாக்குகிறது.

**இன்டர்நேஷனல் மிக்ஸட் மார்ஷியல் ஆர்ட்ஸ் ஃபெடரேஷன்:** இந்த விளையாட்டைப் பற்றிய முழுமையான தகவல்களை அளித்து, பாதுகாப்பு மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்பப் போட்டிகளை நடத்துகிறது.

**இந்திய மிக்ஸட் மார்ஷியல் ஆர்ட்ஸ் ஃபெடரேஷன்:** இந்திய அளவில் போட்டிகளைப் பிரபலப்படுத்தி, விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய லாப நோக்கமற்ற ஓர் அமைப்பு இது.

–ஜி.வி. ரிதன்யா

## இந்தியப் பிரபலங்கள்!



**பாம்பம் தௌனாஜம்** [Bambam Thounaojam] என்பவர், இந்த விளையாட்டில் உலகச் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் ஆவார்.

**பூஜா டோமர்** [Puja Tomar], அல்டிமேட் ஃபைட்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றவர்.



# அக்டோபரில் உச்சம் தொட்ட யு.பி.ஐ. பரிவர்த்தனைகள்

கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும், யு.பி.ஐ. வாயிலாகச் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் அளவு புதிய உச்சத்தைத் தொட்டிருப்பதாக, தேசிய பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் தெரிவித்துள்ளது.

இப்போதெல்லாம் உங்கள் பெற்றோரும் சரி, நீங்களும் சரி, எந்தப் பொருளை வாங்குவதாக இருந்தாலும், ரொக்கமாகப் பணம் கொடுத்து வாங்குவதில்லை தானே? எல்லோரும் மொபைலில் இருக்கும் ஜிபே, போன் பே உள்ளிட்ட பல்வேறு செயலிகளைப் பயன்படுத்துகிறீர்கள்.

சின்ன பொருட்களில் இருந்து பெரிய பொருட்கள் வரை அனைத்தையும் இது போன்ற மொபைல் செயலிகள் வழியாகவே வாங்குகிறீர்கள். இப்படிச் செய்யும் பரிவர்த்தனைக்குத் தான் யு.பி.ஐ. எனப்படும் 'யுனிபைடு பேமென்ட்ஸ் இன்டர்பேஸ்' என்று பெயர்.

அக்டோபர் மாதத்தில், தீபாவளி வந்தது. அதோடு சேர்ந்து, இரண்டு முக்கியமான விஷயங்கள் நமது நாட்டில் நடைபெற்றன. ஜி.எஸ்.டி.2.0 என்ற விதத்தில், பல்வேறு பொருட்களின் மீது விதிக்கப்பட்ட



யு.பி.ஐ. பயன்பாடு

சரக்கு மற்றும் சேவை வரி கணிசமாகக் குறைந்தது. அதற்கு முன்னதாக, மத்திய பட்ஜெட்டில், வருமான வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. அதனால், பொதுமக்கள் கையில் பணப்புழக்கம் அதிகமாக இருந்தது.

அவர்கள் கடந்த தீபாவளிப் பண்டிகைக்காலத்தில், ஏராளமான பொருட்களை வாங்கினர். இதற்கு அவர்கள் பெருமளவு பயன்படுத்தியது யு.பி.ஐ. பணம் செலுத்தும் முறையைத் தான்.

அதாவது கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு, யு.பி.ஐ. பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 25 சதவீதம் உயர்ந்து, 200 கோடிக்கு மேல் அதிகரித்தது. அதன் மொத்த பரிவர்த்தனை மதிப்பு 27.28 லட்சம் கோடி ரூபாய்கள் ஆகும்.

ஒரே ஒரு நாள் மட்டும் என்றுமில்லாத வகையில் பரிவர்த்தனைகள் மிக அதிக அளவில் இருந்தது. தீபாவளி அக்டோபர் 20 அன்று கொண்டாடப்பட்ட நிலையில், அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அதாவது, அக்டோபர் 18ஆம் தேதி மட்டும் பரிவர்த்தனைகள் விண்ணைத் தொட்டன.

அன்று மட்டும், 1.02 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு 75.4 கோடி யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன.

இவ்வளவு அதிகமான பரிவர்த்தனைகள் அக்டோபர் மாதத்தில் நடைபெற்றுள்ளது என்று பெருமையாகச் சொன்னாலும், வேறொரு விஷயமும் முன்வைக்கப்படுகிறது. அதாவது, ஏப்ரல் 2022 முதல் யு.பி.ஐ. பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையும் மதிப்பும் தொடர்ச்சியாகச் சரிந்து வருகிறது.

அதாவது, யு.பி.ஐ. வந்த ஆரம்பக் காலத்தில் எல்லோரும் தமது அனைத்து பரிவர்த்தனைகளையுமே மொபைல் செயலி வழியாகவே செய்தனர். அதனால், அப்போது, மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டது.

தற்போது, பொதுமக்கள், யு.பி.ஐ.யை எங்கே பயன்படுத்த வேண்டும், எவ்வளவு அளவுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டு முதிர்ச்சி பெற்றுவிட்டனர் என்று தெரிவிக்கின்றனர் இந்தத் துறை நிபுணர்கள்.

# எளிய முயற்சி; சீரிய பலன்கள்

பொது விநியோகத் திட்டத்தின் (PDS) கீழ் அத்தியாவசியப் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்கும் முறை, சமூகத்தில் உள்ள ஏழைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களின் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இது வெறும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், மறைமுகமான செலவுகள் மற்றும் வாய்ப்புச் செலவுகளைக் குறைக்கிறது. அதன் மூலம் அவர்களின் நிதிச் சுமை கணிசமாகக் குறைகிறது.


இல்லம் தேடி ரேஷன் பொருட்கள்

இந்தத் திட்டத்தைப் பின்வரும் மாநிலங்கள் நடைமுறைப்படுத்துகின்றன:

**தமிழ்நாடு:** 'தாயுமானவர் திட்டம்' என்ற பெயரில், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் (தற்போது 65 வயதுக்கு மேல் குறைக்கப்பட்டுள்ளது) மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற குறிப்பிட்ட பிரிவினருக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கிட்டத்தட்ட 21.7 லட்சம் பயனாளிகள் (20.42 லட்சம் முதியவர்கள் மற்றும் 1.27 லட்சம் மாற்றுத்திறனாளிகள்) இந்தத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

**ஆந்திரப் பிரதேசம்:** இந்த மாநிலத்தில், பெரும்பாலான ரேஷன் அட்டைதாரர்களுக்கு, நடமாடும் விநியோக வாகனங்கள் மூலம் வீட்டிற்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

**மேற்கு வங்கம்:** இந்த மாநிலம் 'துவாரே ரேஷன்' (*Duare Ration* – வாசலில் ரேஷன்) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது மாநிலம் முழுவதும் சுமார் 10 கோடி மக்களுக்கு உணவு தானியங்களை வழங்க இலக்கு நிர்ணயித்தது.


**பொருளாதார நன்மைகள்:**

- எளியவர்கள் கடைக்குச் செல்வதற்குச் செலவிடும் வாகனக் கட்டணம் மிச்சமாகிறது.
- நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய தேவை இல்லாததால், அந்த நேரத்தை வருமானம் ஈட்டப் பயன்படுத்தலாம்.
- கடைக்குச் சென்று வருவதால் ஏற்படும் உடல் ரீதியான சிரமங்கள் தவிர்க்கப்பட்டு, மருத்துவச் செலவுகள் குறைகின்றன.
- உணவுக்கான செலவில் சேமிப்பு ஏற்படுவதால், மீதமுள்ள பணத்தை மற்ற அத்தியாவசியத் தேவைகளான கல்வி, மருத்துவம் போன்றவற்றிற்குப் பயன்படுத்த முடிகிறது.

வீட்டுக்கே சென்று ரேஷன் வழங்கும் திட்டம், முதியவர்கள், முடியாதவர்களுக்கு நிதி ரீதியான பாதுகாப்பை வழங்குவதோடு, கண்ணியத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது.

**செய்தி:** சூர்யகாந்த் உச்ச நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி

## பல்லாண்டு அனுபவம்; சிறப்பான தீர்ப்புகள்


சூர்யகாந்த்

நீதித்துறையில் ஒரு முக்கியமான மாற்றத்தைக் குறிக்கும் வகையில், இந்தியாவின் 53வது தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் பதவியேற்பார் என மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. தற்போதைய தலைமை நீதிபதி பூஷன் ராமகிருஷ்ண கவாய், நவம்பர் 23 அன்று ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து, சூர்யகாந்த் நவம்பர் 24, 2025 அன்று பதவியேற்பார்.

ஹரியாணாவில் 1962இல் பிறந்த நீதிபதி சூர்யகாந்த், மே 2019 முதல் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி வருகிறார். பல்லாண்டு அனுபவத்தைக் கொண்டுள்ள இவர், உச்ச நீதிமன்றத்தில் பேச்சுச் சுதந்திரம், தேர்தல் வெளிப்படைத்தன்மை, பாலின சமத்துவம், ஆயுதப் படையினருக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட முக்கியமான பல வழக்குகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளை வழங்கியுள்ளார்.

பிப்ரவரி 2027இல் ஓய்வு பெறும் வரை, 15 மாதங்கள் இந்த உயர் மதிப்புப் பதவியில் அவர் இருப்பார்.

இந்தப் பதவிக் காலத்தில், நாட்டின் மிக உயரிய நீதிமன்றத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதுடன், முக்கியமான சீர்திருத்தங்கள் மூலம் நீதித்துறை அமைப்புக்கு இவர் வழிகாட்டுவார்.

இந்த நியமனம், நீதித்துறையின் படிகளில் சீராக முன்னேறுவது உச்ச பதவியை அடைய வழிவகுக்கும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு சட்டத் துறைப் பணி என்பது சட்ட அறிவு, சமூக அக்கறை மற்றும் நீதித்துறை நிர்வாகத் திறன் ஆகியவற்றின் கலவை என்பதை, நீதிபதி சூர்யகாந்தின் பயணம் நமக்கு உணர்த்துகிறது.

**செய்தி:** 22 சதவீத ஈரப்பதம் கொண்ட நெல்லை கொள்முதல் செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்.

# விவசாயிகளுக்கு நெல் ஈரப்பதம் கொடுக்கும் இடையூறு

காவிரி டெல்டா பகுதிகளில், அறுவடை செய்த நெல்லில், கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகரித்துவிட்டது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். வழக்கமாக, மத்திய அரசு 17 சதவீத ஈரப்பதம் வரையுள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய அனுமதிக்கிறது. தற்போது பயிர்ச் சேதம் ஏற்பட்டதால், தமிழக அரசு இந்த வரம்பை 22 சதவீதமாகத் தளர்த்தக் கோரியது. இதையடுத்து, மத்திய அரசின் மூன்று குழுக்கள் டெல்டாவுக்கு வந்து மாதிரிகளைச் சோதித்து, கள நிலவரத்தை ஆய்வு செய்தன.



விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களையே (DPC) பெரிதும் நம்பியுள்ளனர். தனியார் வணிகர்கள் அதிக ஈரப்பதமுள்ள குறுவைப் பயிரைத் தவிர்க்கின்றனர். இந்த ஆண்டு, அதிக விளைச்சல் மற்றும் தாமதமான விதைப்பின் காரணமாக, கொள்முதல் நிலையங்களில் வரிசை நீண்டுள்ளது.

போதுமான சேமிப்புக் கிடங்குகள் இல்லாததால், கொள்முதல் தாமதமானால் நெல் மேலும் சேதமடையும் அபாயம் உள்ளது.

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், மாநில அரசுகள் மத்திய அரசுக்காக நெல்லைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குகின்றன. இங்கு ஈரப்பதம் மின்னணு கருவிகள் கொண்டு சோதிக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம் மற்றும் பஞ்சாபில் முன்னதாக நடந்தது போல, வானிலைக் காரணமாகத் தவிர்க்க முடியாத சேதம் ஏற்படும்போது, மத்திய அரசு விதிகளைத் தளர்த்த வாய்ப்புள்ளது.

வருங்காலத்தில், தமிழ்நாடு அரசு சேமிப்புக் கிடங்குகளை விரிவுபடுத்தவேண்டும். நெல் மூட்டைகளைக் கொண்டு செல்வதை, ரயில்வேயுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைக்க வேண்டும்.

தற்காலிக கொள்முதல் நிலையங்களையும் திறக்க வேண்டும். அதேபோல, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) இதில் ஈடுபடுத்தவும் வேண்டும். வல்லுநர்கள் கூறும் இந்த மாற்றங்களைச் செய்து, நெல் விளைவிப்போரை மகிழச் செய்யவேண்டும்.

**செய்தி:** வாக்காளர் பட்டியலைச் சீர்திருத்தச் சிறப்புத் தீவிரத் திருத்தம்

# மக்களாட்சியின் பதிவேடுகளை தூய்மைப்படுத்துவது அவசியம்

நமது நாட்டில் தேர்தல்கள் நம்பகமானவையாக இருக்க, பிழையில்லாத வாக்காளர் பட்டியல்தான் அடித்தளம். இதற்குத்தான், தேர்தல் ஆணையம் 'சிறப்புத் தீவிரத் திருத்தம்' (SIR) மூலம் வாக்காளர் பட்டியலைச் சரி செய்கிறது. வரவிருக்கும் தேர்தல்களுக்கு முன்னதாக, காலாவதியான பதிவுகளை நீக்க இந்த அரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்தத் திருத்தத்தின்போது, சாவடி நிலை அலுவலர்கள் நேரடியாக வீட்டிற்கே சென்று, வாக்காளரின் வயது, குடியுரிமை, முகவரி போன்றவற்றைச் சரிபார்க்கின்றனர். இடம்பெயர்ந்தோர், இறந்தோர், ஒருவர் பெயரே இரு இடங்களில் இருப்பது போன்றவற்றை நீக்குவதோடு, புதிய வாக்காளர்களையும் பட்டியலில் சேர்க்கின்றனர். நகரமயமாகிவரும் இந்தியா போன்ற பெரிய நாட்டில், இது மெதுவாகவே நடக்கும். என்றாலும் அவசியமான பணி.

இருப்பினும், சில கவலைகள் எழுந்துள்ளன. உதாரணமாக, சிக்கலான ஆவணச் சான்றுகளைக் கேட்பதால், கொடுக்கமுடியாத புலம்பெயர்ந்தோரின் பெயர்கள் நீக்கப்படலாம் என எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன. இதற்கு, ஆதார் முதல் வாக்காளர் அட்டை வரை பல்வேறு அடையாளச் சான்றுகளைப் பயன்படுத்தலாம் என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, மக்கள் ஜனநாயகத்தில் பங்கேற்பது வாக்களிக்கும் நாளன்று மட்டும் நடப்பதில்லை. அதற்கு முன்பே தொடங்குகிறது. பெயர் சரிபார்த்தல், முகவரி புதுப்பித்தல், ஆவணங்களை உறுதி செய்தல் போன்றவை, ஜனநாயகத்தின் சட்டப்பூர்வமான தன்மையைத் தொடர்ந்து பராமரிக்கும்.

சிக்கல்கள், தாமதங்கள், ஆட்சேபங்கள் என்று அனைத்தையும் தாண்டி நடந்தே ஆகவேண்டிய ஒரு பெரும் செயல் இது.



# செக்மேட் உத்திகளில் ஒன்று!

செஸ் விளையாட்டில் எதிராளியைத் தோற்கடிக்க வெறும் நான்கே நகர்த்தல் போதும் என்றால், அதை நீங்கள் தெரிந்துகொள்ளாமல் இருப்பீர்களா?

அல்லது, உங்கள் எதிராளி அந்த உத்தியைத் தெரிந்துகொண்டு உங்களைத் தோற்கடித்தால், அடுத்து அவருடன் விளையாடும்போது, தக்க பதிலடி கொடுக்காமல் தான் விடுவீர்களா?

அப்படியான ஓர் உத்தியைத் தான் பார்க்கப்போகிறோம்.

### ஸ்காலர்ஸ் மேட்

சதுரங்க வீரர்களிடையே மிகவும் பிரபலமான செக்மேட் முறைகளில் ஒன்று 'ஸ்காலர்ஸ் மேட்' (Scholar's Mate).

வெள்ளை அணி வீரர் இந்த உத்தியைக் கையாண்டால், நிச்சயம் நான்கு நகர்வுகளில் கறுப்பு அணி வீரர் தோல்வியைத் தழுவுவார்.

பலவீனமான f7 கறுப்பு சிப்பாய், வெள்ளை ராணி மற்றும் மந்திரியால் தாக்கப்படுவதன் மூலம் இது நடக்கிறது!

### எப்படி?

**முதல் நகர்வு:** படம் 1இல் காட்டியபடி, இரு அணி வீரர்களும் 'கிங்ஸ் பார்ன் ஓபனிங்'கை (King's Pawn Opening) நகர்த்துகிறார்கள்.



**இரண்டாம் நகர்வு:** வெள்ளை அணி வீரர், மந்திரியை c4 கட்டத்திலும், எதிர் நகர்த்தலாகக் கறுப்பு அணி வீரர், b8 குதிரையை c6 கட்டத்திலும் வைக்கிறார்கள்.



**மூன்றாம் நகர்வு:** d4 வெள்ளை ராணி, h5 கட்டத்தில் வைத்ததும்; ராணியைத் தாக்க g8 குதிரை, f6 கட்டத்தில் தயாராகிறது.



**நான்காம் நகர்வு:** எதற்கு வந்தோமோ அந்தப் பணியை வெள்ளை ராணி மேற்கொள்கிறது. அதாவது, படம் 4இல் உள்ளபடி, f7 சிப்பாயை வெட்டி, கறுப்பு அணியை 'ஸ்காலர்ஸ் மேட்'டில் சிக்க வைத்து, ஆட்டத்தை முடிக்கிறது.



இந்த செக்மேட் முறையைத் தொடக்கநிலை வீரர்கள் நிச்சயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இல்லையெனில், வெறும் நான்கே நகர்த்தலில் ஆட்டத்தைப் பறிகொடுக்க நேரிடும்!

தொடக்கநிலை வீரர்கள் மட்டுமல்ல. செஸ் ஜாம்பவான்களும் சூதானமாக இந்த உத்தியை எதிராளி கையாளும்போது புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில், அவர் தோல்வியைத் தழுவ வாய்ப்பு உண்டு! அதிவேகமாக விளையாடப்படும் பிளிட்ஸ் (Blitz) ஆட்டமுறைகளில், சில முன்னணி வீரர்களும் இந்த நகர்வைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

### உதாரணம்:

2017ஆம் ஆண்டில், உலகின் நம்பர் ஒன் செஸ் வீரர் கார்ல்சனுக்கு எதிரான ஒரு பிளிட்ஸ் ஆட்டத்தில், பிரான்ஸ் இன்டர்நேஷனல் மாஸ்டர் பிலேலோ (Bilelou) 'ஸ்காலர்ஸ் மேட்' உத்தியை மேற்கொண்டார். ஆனால், கார்ல்சன் சுதாரித்துக் கொண்டார். அப்புறம் என்ன நடந்தது என்பதை இந்த க்யூ.ஆர் குறியீட்டை (QR code) ஸ்கேன் செய்து தெரிந்துகொள்ளுங்கள்.

### எப்படி ஸ்காலர்ஸ் மேட் உத்தியிலிருந்து தற்காத்துக்கொள்வது?

மூன்று சிறந்த வழிகள் இருக்கின்றன.

1) படத்தில் காட்டியபடி, g7 சிப்பாயை g6இல் வைப்பது.



2) படத்தில் உள்ளபடி, கறுப்பு ராணியை e7இல் வைப்பது.



3) படத்தில் இருப்பதுபோல, கறுப்பு ராணியை f6இல் வைப்பது.



சதுரங்கத்தில் மிகவும் பொதுவான செக்மேட்களில் ஒன்று உங்களுக்கு இப்போது தெரியும். இந்த உத்தியை உங்கள் எதிராளியிடம் முயற்சி செய்து பாருங்கள்!

## தமிழகத்திற்குப் புதிய கிராண்ட்மாஸ்டர்!

தமிழ்நாடு செஸ் விளையாட்டுக்கு ஒரு மையமாகத் திகழ்ந்து வருகிறது. இந்த வரிசையில், சென்னையைச் சேர்ந்த 16 வயதான இளம்பரிதி (Ilamparthi), இந்தியாவின் 90வது கிராண்ட்மாஸ்டர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இதன்மூலம், தமிழ்நாட்டில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெற்ற 35வது வீரர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.

போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா (Bosnia and Herzegovina) என்ற நாட்டில் நடைபெற்ற பிஜெல்ஜினா ஓபன் 2025 (Bijeljina Open 2025) செஸ் போட்டியில், தனது இறுதி கிராண்ட்மாஸ்டர் நெறியைப் (Final GM Norm) பெற்று, இந்தச் சாதனையை உறுதி செய்தார்.


ஏ.ஆர். இளம்பரிதி

### அது என்ன நெறி?

ஒருவர் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெற சில தகுதிகளை அவர் அடைய வேண்டும்.

- **சதுரங்க விளையாட்டில் குறைந்தபட்சம் 2500 பிடே மதிப்பீட்டைப் பெற வேண்டும்.**
- **மூன்று கிராண்ட்மாஸ்டர் நெறிகளைப் பெற வேண்டும்.**

நெறி என்பது சிறந்த செயல்திறனாகும். பிடே அங்கீகரித்த போட்டிகளில் அதிகச் செயல்திறனை (2500+ மதிப்பீடு) பெறுபவர், இன்டர்நேஷனல், கிராண்ட்மாஸ்டர் உள்ளிட்ட பட்டத்தைத் தன்வசப்படுத்துவார்கள்.

இளம் வயதிலேயே தன்னுடைய அபார திறமையைக் காட்டிய இளம்பரிதி, வெற்றிகரமாகத் தனது மூன்று கிராண்ட்மாஸ்டர் நெறிகளைப் பெற்றதோடு, 2500 ரேட்டிங்கையும் கடந்து, இந்த உயரிய பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இளம்பரிதியின் இந்தச் சாதனைக்காகத் தமிழக முதலமைச்சர், உலகச் சாம்பியன் விஸ்வநாத ஆனந்த் உள்ளிட்ட பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இவருடைய இந்த வெற்றி, செஸ் விளையாட்டில் தமிழகத்தின் ஆதிக்கத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், வருங்கால இளைஞர்களுக்கு உத்வேகமளிக்கும் ஒரு மைல்கல்லாகவும் அமைந்துள்ளது.